கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அமர்வு வழக்கு எண்.54/2022

அ.சா. 6 (LW 6 )

| **பெயர்** | பிரேம்குமார் | **தொழில்** | |
|---|---|---|---|
| **தகப்பனார் பெயர்** | முருகன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **13.07.2023** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1,2,3 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது நிலக்கோட்டை ஆவாரம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் நான்கு சக்கர வாகன ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். கடந்த 14.06.2021ம் தேதி மாலை 4.30 மணியளவில் கருப்பையா என்பவர் கொலை செய்யப்பட்டு விட்டதாக கேள்விப்பட்டு, திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். சம்பவம் நடந்த இடமான சிலுவத்தூர் ரோட்டிற்கு சென்றேன். என்னுடன் மகுடீஸ்வரன் என்பவரும் வந்தார். அப்போது போலீசார் அங்கு வந்து, சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் தயார் செய்து, பார்வை மகஜர் எழுதினார்கள். அதில் நானும், மகுடீஸ்வரனும் கையொப்பம் செய்தோம். நான் கையொப்பம் செய்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. TVS Heavy Duty இருசக்கர வாகனம் பதிவு எண்.1828 என்ற வாகனத்தை சம்பவ இடத்திலிருந்து போலீசார் கைப்பற்றினார்கள். தார் சாலையில் ரத்தம் சிந்தியிருந்த மண், ரத்தம் படாத மண் ஆகியவற்றை போலீசார் மகஜரில் கைப்பற்றினார்கள். அதில் நானும், மகுடீஸ்வரனும் கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் கைப்பற்றிய இருசக்கர வாகனத்தின் புகைப்படம் தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள ஒரு வாகனம் ஆகும். அது சா.பொ.1 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2023.07.13 16:24:34 +0530

Additional District Judge,

Dindigul.